# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

96ம் புத். | 1971-ம் ஞு பங்குனிமீ 6-ந் வ சனிக்கிழமை | பிரதி சதம் 15 | 9-ம் இல


# கருதினல் கூறே அடிகளின்

## மேற்றிராணித்துவ வெள்ளி யூபிலி

எங்கள் நாட்டின் கருதினல்கூறே அடிகளார் ஒரு மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டு 25 வருடங்கள் நிறைவுபெறும் நாள் இம்மாதம் 7-ம் திகதியாகும். இந்த 25 வருடகாலமும் கொழும்பு அதிமேற்றிராசனத்தில் ஆயர் கருதினல்கூறே அவர்கள் செய்து வந்த அரும்பெரும் தொண்டுக்கு தேவனுக்குத் தோத்திரம் செய்வதற்காக அதிமேற்றிராசனக் குருமாரும், பொதுநிலை மக்களும் இம்மாதம் 8-ம்திகதி சென் லூசியா தேவாலயத்தில் ஒன்றுகூடித் திருப்பலி ஒப்புக்கொடுப்பர். பெருந்தொகையான குருமாருடன் கருதினல்கூறே அடிகளார் அன்று தினம் சாயுங்காலம் 5-30 மணிக்கு கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்க இருக்கின்ருர். அன்று திருப்பலியின் போது காணிக்கைப் பொருட்களாக ஞானப் பூச்செண்டுகள் முக்கியமான இடம் பெறும். இப்பூச்செண்டுகளைத் தயாரிப்பதில் பாலரும், முதியோரும் இந்நாட்களில் விசேஷகவனம் செலுத்திவருகின்றனர். இலங்கையிலுள்ள அவரது ஞானப் புதல்வர், ஞானப் புதல்விமார் யாவரும் இக்காணிக்கையில் பங்குபெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். 25-ம் வருட யூபிலிவைபவத்தை ஆன்ம கருமசிரத்தையுடன் தம்மக்கள் கொண்டாடுவதே கருதினல்கூறே அடிகளாரின் மனதுக்கு உவந்ததாகும்.

## 23-ம் அருளப்பருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்ட முதற்படிகள்

பரிசுத்தபாப்பரசராகத் தெரிந்தெடுக்கப்படுமுன் 23ஆம் அருளப்ப பாப்பரசர் பிதாப்பிதாவாகத் தொண்டுசெய்த வெனிஸ் பிரதேசத்தில் அவர் செய்து வந்த வேலைகளும், அவர் நடாத்திய சீவியமும், அவரால்வரையப்பட்ட யாவும் மிக நுட்பமாக அப் பிரதேச மேற்றிராணிமார்களால் ஆராயப்பட்டிருக்கின்றன. இந்த ஆராய்வை "ஆரம்ப விசாரணை என அவர்கள் விளக்கியிருக்கின்றனர். இந்த விசாரணை 92 நாள் காலைவேளைகளில் நடைபெற்றன. நடைபெற்றபோது விசாரணை நடந்தபுனித மொயி தேவாலயம் மக்களால் தேம்பிவழிந்தது. தேவாலய திருப்பீடத்துக்குச் சமீபத்தில் பலவர்ணமைகளினல் தீட்டப்பெற்ற அவரது பிரதிமைப்படம் அவ்விடத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

### பசிபிணிக்குதவ உண்ணுவிரதம்

ஸ்பானியதேச மேற்றிராணிமாரின் தூண்டுதலின் மேல் சென்ற மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை அத்தேச கத்தோலிக்கரில் பலர் உண்ணுவிரதம் அனுசரித்து அதனல் அவர்கள் அன்று தம் உணவில் சேமித்த பணத்தை அத்தேசத்தவரின் பசிபிணிக்குதவ முன்வந்துள்ளமை, அங்குள்ள பெரும் பாலானேரின் நற்குணத்தை வெளிப்படுத்துகின்றது. இச்செய்கையினல் ஒரு கோடி சிலிங் பெறுமதியான பணம் இவ்வகையில் சேகரிக்கப்பட்டதென அத்தேச செய்திகள் கூறுகின்றன.

## நாட்டின் 8அம்ச செல்வாக்குத் திட்டம்

அண்மையில் கிழ்மாகாண அம்பாறைப் பட்டணத்தில் நடைபெற்ற அகில இலங்கை சிறிலங்கா சுதந்தரக் கட்சியின் வருடாந்த கூட்டத்தில் ஆற்றிய தலைமை உரையில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக இந்நாட்டின் செல்வாக்குக்கு 8 அம்சங்கள் அடங்கிய திட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்தார்: அது இதுவே.

1: எமது தேவைக்குரியனவற்றை நாமே உண்டாக்குதல்:

2: அந்நியநாட்டுச் செலாவணி தேவைப்படும் பொருட்களைக் கூடியளவு வாங்காமல் விடுதல்.

3: கடும் உழைப்பு:

4. பணச்செலவு அதிகமில்லாத எளிய வாழ்வு.

5: சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல்.

6. கைலஞ்சம் முதலிய ஊழல்களை அகற்றுதல்:

7. சகலருக்கும் பொதுவான பொருட்களின் பாதுகாப்பில் விழிப்பு.

8. கடமைகளை மரியாதையுடனும், கட்டுப்பாடுடனும் செய்து முடித்தல்.

### திறம் விசாரணைப் பங்கு எது ?

செல்வந்தர்கள் பெருமளவாக உள்ளதா திறம்விசாரணைப்பங்கு? பெரும் பள்ளிக்கூடங்களும் பெரும்கோவில்களுமுள்ளதா திறம் விசாரணைப்பங்கு அன்றேல் வறியவர்கள் நிரம்ப உள்ளதா திறம்விசாரணைப்பங்கு? யேசுநாதரின் சுவிசேஷத்துக்கு எந்த விசாரணைப் பங்கில் அதிகம் செவிசாய்க்கப்படுகின்றதோ, அதுவே திறம் விசாரணைப்பங்கு:

## பாலர் தினம்

உலகம் முழுவதும் சென்ற மாசி மாதம் 28-ம் திகதியன்று, பாப்பரசரின் சங்கத்தினர் ஊக்கத்துடன் பாலர் தினத்தைக் கொண்டாடினர். இத்திருநாள் 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள் திருநாளாகும். சிறுவர் சிறுமிக

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)


வெளிவந்துவிட்டது!

விற்பனையாகின்றது !!

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இறைபணி ஏடு

"இறைவனைப் புகழ்வோம்"



திருப்பலியின் பொதுச் செபங்களும், வருகைப் பாடல், காணிக்கைப்பாடல், திருவிருந்துப் பாடல் ஆகியவற்றுக்குப் பதிலாகப் பாடுவதற்கென ஆயர் குழுவின் அங்கிகாரம்பெற்ற 115 பாடல்களும், இறைபணியில் பயன்படக்கூடிய வேறு 85பாடல்களும், 20 சங்கீதங்களும் அடங்கிய — கைக்கு அடக்கமான ஏடு! இறைமக்கள் இன்பமாக இறைபணியில் கலந்து கொள்ள உதவும் இலட்சிய ஏடு! இறைவனைப் புகழ ஒன்றுகூடும் இறைமக்கள் ஒவ்வொருவரின் கரங்களிலும் தவழவேண்டிய அரிய ஏடு!

பக்கங்கள் : 191 + XVI. விலை: சதம் 80.

கிடைக்குமிடம் :
புனித சூசைமாமுனிவர் அச்சகம், பிரதானவீதி, யாழ்ப்பாணம்.


## புதிய போலாந்து அரசாங்கத்தின் உதாரகுணம்

புதிய போலாந்துப் பிரதமர் யரோஸ்சேவிச், போலாந்து திருச்சபைக்கு உரிய கட்டிடங்களையும், கோவில்களையும், நிலங்களையும், பெரும் உதாரகுணத்துடன் திரும்பவும் கொடுத்துவிட ஆயத்தங்கள் செய்துவருகின்ருர். 1945-ம் ஆண்டு தொடக்கம் இந்நிலங்களை ஜேர்மனி தேசமே தமது சொந்தமாகக்கிக் கொண்டது. ஆனல், அண்மையில், ஜேர்மனி தேசத்துக்கும் போலாந்துக்குமிடையில் ஏற்பட்ட உடன்பாடுகளின் பயனக இவை மீளவும் போலாந்துக்குக் கொடுக்கப்பட்டன. சென்ற 25வருடகாலமாக இப்பகுதிகளில் உறுதியான கத்தோலிக்க பரிபாலனம் நடைபெறவில்லை. ஜேர்மனியின் பகுதியாக இருந்தபொழுதிலும் மக்கள் போலாந்தினராயிருந்ததால் பரிபாலனத்தில் பெரும் தொல்லைகள் நிறைந்திருந்தன. இந்நிலம் போலாந்து திருச்சபைக்கு அளிக்கப்பட்டதன்பின் அத்தேச திருச்சபை அதிகாரிகளின் கண்காணிப்பின்கிழ் கத்தோலிக்க வாழ்வு மலர்ச்சி அடையக் காரணங்களுண்டு:

### நியூசிலாந்தின் உதவி

தென் பசிபிக் பிரதேசத்தின் வளர்ச்சி குன்றிய தேசங்களுக்கு தம்மாலான உதவிசெய்ய நியூசிலாந்து கிறிஸ்தவர்கள் முன்வந்திருக்கின்றனர்: இம்முயற்சியில் கத்தோலிக்க திருச்சபையும், மறுகிறிஸ்தவ சபைகளின் தேசியசங்கமும் பெரும்பங்கு எடுத்துவருகின்றன. அப்பிரதேசங்களிலிருந்து நியூசிலாந்து தீவில் குடியேறுவதற்கு இடப்படும் கட்டுப்பாடுகள் கிறிஸ்தவ தன்மையுடையனவாக இருக்க அரசாங்கத்துக்கு நல்லாலோசனை புகட்டப்பட்டதன் காரணமாக நியாயமற்ற கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. 1971-ம் ஆண்டில் அடைந்தேற வேண்டிய முன்னேற்றங்கள் எவையெனக் குறிக்கப்பட்டு, பல முறைகளிலும் நிதி திரட்டப்பட்டு வருகின்றது.

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண் "

# சிலுவையின் வழி சீவியம்

## தவக் காலத்துக்குரிய புதிய சிந்தனைகள்

— எஸ். எம். ஜே. —

[முன் தொடர்ச்சி]

### சிந்தனை 5

**சீரேன் ஊர் சீமோன் யேசு சிலுவை சுமக்க உதவுகிறான்**

நன்றியில்லா சனக்கும்பல்
கிறிஸ்து சிலுவையில்
தொங்கும் காட்சியைக் காணத் துடிக்கிறது.
ஆனால், கல்வாரி சேருமுன்
கிறிஸ்துவின் உடல் செயலற்றுவிட்டது;
சீமோன் உதவி தேவைப்படுகின்றது.........
கிறிஸ்துவின் சிலுவை சுமக்க,
வீரனின் விருதுக்கொடி தாங்க,
கிடைக்கும் பாக்கியந்தான் என்னே!
இச் சேவைக்கு நான் தெரியப்பட்டிருந்தால்
நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேனு?
என் அன்றாட வாழ்க்கையில்,
மறு கிறிஸ்துக்களாகிய என் சகோதரர்
தங்கள் வாழ்வில் துன்பச் சுமையால் வருந்துகையில்
நான் கைகொடுத்து உதவ சந்தர்ப்பம் இருந்தும்
பாராமுகமாயிருக்கலாமா?
இறைவா, துன்புறும் என் சகோதரர் வாழ்வில் கைகொடுத்து உதவும் கருவியாக என்னை ஆக்கியருள்.

### சிந்தனை 6

**யேசுவின் முகத்தை ஒரு பெண் துடைக்கிறாள்**

கூக்குரலிடும் கும்பலை பொருட்படுத்தவில்லை அப்பெண்.
பைத்தியக்காரன் எனப்பட்ட கிறிஸ்துவுக்கு பரிவும் பாசமும் காட்டத் துணிகிறாள் அந்த வீரமங்கை.
இத் துணிவுக்குப் பிரதிபலன்;
துடைத்த துணியில் யேசுவின் திருமுகம்.
இதுவன்றோ பிரதியன்பு.
எனக்கோ கிறிஸ்துவுக்குப் பகிரங்கமாக பிரமாணிக்கம் காட்ட வெட்கம்.
கிறிஸ்துவின் போதனை மூடத்தனமானவை யென்று பிறர் சொல்வதைக் கேட்டும் நான் பேசாமடந்தையாகின்றேன்;
இகழ்ச்சியின் மத்தியிலும் உமக்குப் பிரமாணிக்கம் தவறு வரம் அருள்வாய் இறைவா!

### சிந்தனை 7

**திரும்பவும் யேசு கீழே விழுகிறார்**

விழுந்த கிறிஸ்து எழுந்து நிற்க துணை செய்வார் யாருமில்லை.
தவறி விழுந்த என் சகோதரன் திருந்தி நடக்க உதவுவது,
விழுந்த கிறிஸ்து எழுந்து நடக்க கைகொடுத்து உதவுவது போலல்லவா?
பாவத்தையன்றி பாவியைப் பழியாதே-
மாறாக, பாவிக்குப் பரிவும் பாசமும் காட்டு.
பாவிக்குப் பரிவு காட்டும் பண்பை இறைவா! எனக்கருள்வாய்.

### சிந்தனை 8

**யெருசலேம் பெண்கள் யேசுவுக்காக அழுகின்றனர்**

கிறிஸ்துவைப்போல் துன்பப்பட்டவர் யாருமில்லை,
அவரைப்போல் ஆறுதல் அளிப்பவரும் யாருமில்லை.
கிறிஸ்துவைப்போல் ஆழ்ந்த அன்பை ஈந்தவர் யாருமில்லை;
அவரைப்போல் இதயத்தை இதமாக ஈர்க்கக் கூடியவரும் யாருமில்லை.
கிறிஸ்துவைப்போல் தன்னலங் கருதாத் தியாகி யாருமில்லை;
அவரைப்போல் துன்பச் சுமையிலும் மனோதிடன் அளிப்பாரும் யாருமில்லை;
நான் என் ஆறுதலுக்காக அலைகின்றேனு
அயலாருக்கு ஆறுதல் அளிக்கின்றேனு?
அன்பை ஆசிக்கின்றேனு,
அன்பை அளிக்கின்றேனு?
நம்பி வாழ்கின்றேனு,
நம்ப வாழ்கின்றேனு?
நான் என் ஆறுதலுக்காக அலைவதை விடுத்து ஆறுதலை அளிக்கும் வரமருள்வாய், இறைவா!

---

# அநேகர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்துவந்து பரலோக இராட்சியத்தில் ஆபிரகாம்ஈசாக்குயாக்கோபு என்பவர்களோடு கூடப் பந்தியில் அமர்வார்கள்.

(புனித மத். 8-ம் அதி. 11-ம் வச.)

நம் தெய்வீக அன்பராம் யேசுநாதர் கூறிய இவ்வருள் வாக்கைத் தொடர்ந்து வரும் அடுத்த வசனத்தையும் கவனிப்போம். (புனித மத். 8ஆம் அதி 12ஆம வச.) "இராட்சியத்தின் மக்களோ, புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்." ஆ! இத் தெய்வீக இராட்சியத்தை இழக்கும் நிர்ப்பாக்கிய மக்கள் யார்! ஏன இவர்கள் இவ்வாறு இருளிலே தள்ளப்படுவார்கள்? பிதாப்பிதாக்களாம ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் பந்தியில் அமரும் பேறுபேற்றோர் யார்? அவர்களுக்கு இப்பேறு எவ்வாறு கிடைக்கும்? என்பவற்றைப்பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

நம் அன்பின் மீட்பர் ஒன்றைக்கொன்று முற்றும் முரணுன இவ் வாக்கியங்களை எப்போ? எச் சந்தர்ப்பத்தில்? ஏன் கூறினர்? இரண்டாயிரம் வருடங்களின் முன் மனிதனுடன் மனிதனுக நடமாடிய நம் இரட்சகர் பல புதுமைகளைச் செய்து, தாம் இறைமகன் என்று காண்பித்து, தமது நற்செய்தியை அறிய வைத்து வரும்போது கப்பர்நாம் ஊரில் ஓர் நாள் பிரவேசித்தார். அந்நகரமம் நூற்றுக் கதிபதியான செந்தூரியன் என்பவன் அவரிடம் வந்து அவரை மன்றாடி, தனது ஊழியன் திமிர்வாதமாய்க் கிடந்து, அகோர வேதனைப்படுவதை அறிவித்தான். அப்போது யேசுநாதர் நான் வந்து அவனைக் குணப்படுத்துவேன்" என்றார். அவனோ, யேசுநாதரின் தெய்விகத்தையும், தனது எளிமையையும் உணர்ந்து, "ஆண்டவரே! என் இல்லத்தில பிரவேசிக்க அடியேன் பேறுபெற்றவன் அல்ல. ஆயின் தேவரீர் ஒரு வார்த்தைமாத்திரம் திருவுளம்பற்றினுல் என் ஊழியன் குணப்படுவான்" என்றான். இவ் வாக்கியத்தைக்கேட்டு யேசுநாதர் அதிசயித்து, தம் பிறகே வருபவர்களைப்பார்த்து, "நான் இஸ்ராயேலரிடத்திலும் இப்படியான விசுவாசத்தைக் காணவில்லை" என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று அவனது விசுவாசத்தைப் புகழ்ந்தவர், இறைமக்களென அழைக்கப்பட்டவர்களிலும் அநேகர் தம் விண்ணகப்பேற்றை இழப்பரென அறிவிக்கச் சித்தங்கொண்டார். அத்துடன் பிறஜாதியாரும், பிற மதத்தினரும் தமது உண்மைநெறியைக் கண்டறிந்து, தாமே உண்மைத் தெய்வமான பரலோக பிதாவின் வாக்களிக்கப்பட்ட மெசியா என்பதை உணர்ந்து ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடன் தமது தெய்வீக பந்தியில் அமருவார்கள் என்பதையும் விளக்கினர்.

யேசுநாதரை இறைமகனென விசுவசித்த நூற்றுக் கதிபதியின் பொன்வாக்கைக் கிறீஸ்தவர்களாகிய நாமும் அறிந்து உணர்ந்து சிந்திக்கும் படியும், இவ்வுலகிலேயே அத் தெய்வீக விருந்தாம் தேவநற் கருணையை நாம் உட்கொள்ளும் போதெல்லாம், முன், ஆயத்தமாக அவ்வார்த்தைகளை உச்சரித்து, அவருடன் ஒன்றிக்கும்படியும், நம் அன்னையாம் திருச்சபை நம்மை ஏவுகிறது. எவ்வளவு ஆழமான கருத்தடங்கிய வாக்கியம். அச் செந்தூரியனைப்போன்ற உறுதி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

---

**திரு. சீமான்பிள்ளை ஆரோக்கியநாதர்**

அவர்களின்

## 24ஆம் வருட மரண ஞாபகம்

6—3—1971

இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதியில் கிறேற் வெஸ்ரேன் ஸ்ரேசன் மாஸ்ரராகச் சேவை புரிந்த எனது அருமைப் பத்தாவும், எமது பிரிய பிதாவுமான திரு. சீமான்பிள்ளை ஆரோக்கியநாதர் இவ்வுலகை விட்டு மறைந்த 24ஆம் வருடம் இம் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை பூர்த்தியாகின்றது. அன்று தினம் யாதகல் ஊர்து கெபியில் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் காண்ணுறும் யாவரும் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

துயருறும் மனைவி:
மரியநாயகி ஆரோக்கியநாதர்

மக்கள்:
டக்றர் ஆ. இம்மானுவேல்,
இம்மானுவேல் நவரட்ணராசா
(நீர்ப்பாசன இலாகா)
இம்மானுவேல் இக்னேஷஸ் ரட்டினராசா.

மருமக்கள்:
பிலோமினு ஆரோக்கியநாதர்
(அப்போதிக்கரி)
ராசேஸ்.

---

## 1-ம் வருட மரண நினைவு

"என்னுடைய சீவியம் மின்னலைப்போல் தோன்றி மறைந்தது. என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே என்னை மரணத்திலும் மறவாதீர்கள்."

தோற்றம்: 1-11-1921 மறைவு: 4-3-1970

எங்கள் அனைவரையும் அன்புடன் நேசித்து எல்லோருக்கும் இனியராக வாழ்ந்து கர்த்தரில் மரணமடைந்த

**திரு. பிரகாசம் பாக்கியநாதர்**

அவர்கள் மரணமடைந்த முதலாவது ஆண்டு நிறைவுறுவதால் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-3-71 வியாழக்கிழமை காலை 6மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் துக்கப் பாடற்பூசை நடைபெறும்.

இதைக் கண்ணுறும் யாவரும் அவரது ஆன்ம நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், உறவினர்.

---

**நன்றித் துதி**

மன்னாகுளம்பான் புனித அந்தோனியாரிடம் இரந்துகேட்டுக் கொண்டபடி எனது பணமுடையை நீக்கியது. நன்றி. அவ அவரின் நாமம் புகழப்படுவதாக.

30-71 ஒரு பக்தர்

---

**விசுவாசம் நிக்கிலாஸ்**
(இளைப்பாறிய கேன்ஸ்மேன், தபால்பகுதி)
மன்னார்

## 4-ம் வருட ஞாபகம்

பிறப்பு: 25-12-1890 இறப்பு: 11-3-1967

வயது: 76

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்."

இவர் எங்களைவிட்டுப் பரலோக பிராப்தியான 4ஆம் வருடம் பங்குனி மாதம் 11-ம் திகதி பூர்த்தியாகிறபடியால் அன்றைய தினம் துக்கப் பாடற்பூசை ஒன்று அர்ச். செபஸ்தியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக் கண்ணுறுவோர் இவரது ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மக்கள்.

சாவல்கட்டு,
மன்னார்.

---

**நன்றித் துதி**

பிரோக்கர பால யேசுவிடம் பண உதவி கோரிக் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியார்

---

## 13-ம் வருட மரண ஞாபகம்

"சுவாமி! பாதாளத்திலே நின்று உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; சுவாமி, என் சத்தத்தைக் கேட்டருளும்."

பிறப்பு: 11—5—1907 இறப்பு: 10—3—1958

"மிகவும் மதுர யேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும் பொழுது அனுபவித்த அளவில்லாத கஸ்திநோவுகளைப் பார்த்து எம்.எஸ். பெரேரா அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் சுவாமி. முடிவில்லா ஒளி இவருக்குப் பிரகாசிக்கக் கடவது."

எனது அன்புமிக்க பத்தாவும், எங்கள் நேசத் தந்தையுமாகிய எம். எஸ். பெரேரா (தலைமை ஆசிரியர்) அவர்கள் எம்மை மாறுத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமலன் பதஞ்சேர்ந்த 13ஆம் ஆண்டு நிறைவுதினம் இம்மாதம் 10-ந்தேதி (10-3-71) புதன்கிழமை பூர்த்தியாகின்றமையால், அன்றுகாலை சிலாபம் புனித பெர்னதேத்தம்மாள் ஆலயத்தில் அவருடைய ஆன்மசாந்திக்காக ஒருதுக்கப் பாடல்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர் மற்றும் இனசனர், நண்பர்கள், ஆசிரியர், மாணவர் யாவரும் தங்கள் செபங்களில் இவரை நினைவுகூரும்படி வேண்டுகின்றோம்.

பத்தாவை இழந்து பரிதவிக்கும்:
எம். மாகிறேட் பெரேராவும்

தந்தையை இழந்து துயருறும்:
பிள்ளைகளும்.

---

## 8-ம் வருட நிறைவு

கர்த்தரில் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

**திருமறை வண. பிதா. சூசைநாதர் நல்லையா சுவாமி**

அவர்களின்

இறைவனடி சேர்ந்த எட்டாம் வருட நிறைவு தினம் 8-3-1971.

வங்காலைப் பங்கில் பல வருடங்களாகத் திருத்தொண்டு செய்து தேவ அழைத்தல்களை ஊக்குவித்தவர்.

மறைவு 8-3-1963

வாழ்வில் நேசித்தவர்களே மரணத்தில் மறவாதீர்கள்.

வங்காலை குளாஸ் குடும்பங்கள்

[31-71]

# நான் கடவுளைக் கண்டேன்

(செல்வி காமல் இக்னேஷியஸ்)

வற்றாமல் நீண்டுகொண்டு ஓடிக்கொண்டிருக்கும் யோர்தான் நதிதான் அது; அதன் பக்கலிலே வனப்புமிக்கவனந்தரம். மனித நடமாட்டமற்ற அங்கு ஓர்உருவம் உலாவுகின்றதா? ஏகாந்தமான அங்கு கேட்கும் ஒரேகுரல் மனித குரலொலிதானா? சற்றுநேர சிந்தனை பலமடைகின்றஅதே வேளை எழுகின்ற சந்தேகம் அப்படியே அமுங்கிப்போய் விடுகின்றது. ஆம், ஐயத்திற்குச் சற்றும் இடமில்லையே. அங்கு நடமாடுவதும் கேட்கிறதும் மனிதக் குரல்தான்.

அதோ தெரிகின்ற உருவம் மனித உருவமாயிருந்தும், தோற்றத்தில் முற்றும் துறந்த துறவியாகுமோ? அம்மனிதனின் உடலை மூடியிருக்கும் ஆடை ஒட்டக மயிருடையோ? அவரிடையிலே தெரிவது வார்க்கச்சையோ? உண்ணும் உணவிற்கூட மாற்றம் தென்படுகின்றதே. வனங்களில் உறையும் வெட்டுக் கிளிகளும், காட்டுத் தேனும் அவரின் உணவாகுமோ?

இவ்வாறு "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற தத்துவார்த்தத்தில் எழுந்த உடலையும், உள்ளத்தையும் வருத்தி வாழ்கின்ற வாழ்க்கைதான் மனித வாழ்க்கையோ? அந்த மனித உருவத்தின் உள்ளத்தினின்று உதடுகள் வழியாகப் பாயும்நதி தேன்நதியோ? உடலைப் போஷிக்கும் காட்டுத் தேனின் இனிமைக் குரலொலியோ? அந்தக் குரலின் வலிமைக்கு யூதேயா, ஜெருசலேம் முதலான நகரங்களும் அடிமையாகி விட்டதோ? நாவன்மை கேட்டறிந்து நாட்டுமக்கள் அனைவரும் அலை அலையாகத் திரண்டு வனாந்தரத்திலே வசிக்கவே வந்து விட்டார்களோ?

அந்த மனிதனின் பேச்சும் நயமும் நிலையற்ற உலகம் பற்றியதல்ல; நிலையான உலகம் பற்றியதே. "தவஞ்செய்யுங்கள்; ஏனெனில், மோட்ச இராட்சியம் சமீபித்திருக்கின்றது (லூக். 3: 3). இப்பொழுதே மரங்களின் வேரருகிலே கோடாரி போடப்பட்டிருக்கின்றது. ஆகையால் நற்கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (மத். 3–10). அவரின் கருத்துரை கேட்டுச் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற மக்கள்பலர் தங்கள் மனச்சாட்சிக்குளதிராய் இதுவரை இழைத்துவிட்ட குற்றங்களை அந்த மனிதனுக்குத் தெளிவுபடுத்தி, அவர் தூய கரங்களால் அந்தப் பாய்ந்தோடும் நதியிலே கழுவிக் கரைத்துக் களிப்பெய்தினார்கள். இன்னும்பலர் அந்த முயற்சியினைக் கையாள்வதற்கு ஆயத்தமாகின்றனர். இந்நிலையில் அவர்கள்மனமே அம்மனிதனை எடைபோடுவதில் லயித்திருந்தது. இம்மனிதர் எபமாத்திரம் வல்லமை மிக்கவராயிருக்கிறார். துறவியிலும் தூய்மையானவரோ? ஒருசமயம் "கிறீஸ்து" அவராக இருக்கக்கூடுமோ என்ற எடைபோடலாயிருந்தது. சிலர் துணிந்து கேட்டும்விட்டார்கள். 'நீர் யார்' என்ற வினாவேதான்.

"நான் கிறீஸ்துவானவர் அல்ல; அறுதியிட்டு உறுதி கூறினார். நான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆனால், நீங்கள் அறியாத ஒருவர் உங்கள் மத்தியில் நிற்கிறார். அவர்தான் எனக்குப்பின் வருபவரும், என்னிலும் மேன்மையுடையவரும் அவர்தான். அவருடைய பாதங்களில் அணிந்திருக்கும் பாதரட்சையின் வாரைத்தானும் அவிழ்க்கத் தகுதியற்றவன் நான் (மாற்கு 1: 7; லூக். 3: 16; அப். 1: 5, 11—16, 19: 4) என்றார். அந்தக் கிறீஸ்துவானவர் உங்களுக்குப் பரிசுத்தஆவியினால் ஞானத்திட்சை அளிப்பார். அவர் ஒருவர்தான் விண்ணிலும் மண்ணிலும் பரி. ஆவியினால் தீட்சை அளிப்பவர் என்றார்.




இப்படிப் பலநாட்கள் அவருடைய வனாந்தர வாழ்க்கை தொடர்ந்தது. கடவுளின் காலம் மிக நெருங்கி வந்தது. இறுதியாக ஒருநாள் அருளப்பர் கரங்களால் ஞானமுழுக்குப் பெறுவதற்காக முப்பது வயது நிரம்பிய யேசு அவ்விடம் வந்தார். அருளப்பர் தடுமாறினார். தேவரீரால் நான் ஞானத்திட்சை பெறவேண்டியதாயிருக்கையில் நீர் என்னிடம் வருகிறதெப்படி என்று கூறி, முதலில் மறுத்த அருளப்பர் இறுதியில் யேசுவின் விருப்பத்திற்குப் பணிந்தார். யேசுநாதர் அருளப்பர் கரங்களால் ஞானமுழுக்குப்பெற்று நதிக்கரையினின்று அகன்றார். அப்போது, "என் நேசகுமாரன் இவரே; இவர்பேரில் நான் பூரண பிரியமாயிருக்கிறேன் என்று வானத்திலிருந்து ஒருகுரல்ஒலி கேட்கப்பட்ட அதேவேளை பரமண்டலம் திறக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவர் புறாவடிவமாய்க் கிறீஸ்துவானவர்மேல் நிற்பதையும் தன்கண்களால் கண்டுகொண்டார். அருளப்பர் உடலெல்லாம் புல்லரித்தது. ஆச்சரியத்துடன் விழிமூடாது பார்த்துநின்றார் அக்காட்சியை. சிலவினாடிகளில் கண்களினின்று ஆனந்தநீர் அருவியாக ஓட கடவுள்என்னும் ஒளியைக் குவித்துச் சாட்சி சொல்லவந்த யேசுவுக்கு முன்னோடியான துறவி அருளப்பர் கடவுளைக்கண்ட களிப்புடன் தன் வனாந்தர வாழ்க்கையை வெற்றியாக முடித்ததிருத்துடன் கால்கள்போன பாதையிலே சென்றுகொண்டிருக்க, யேசுநாதரைப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வனாந்திரத்திற்கு நாற்பதுநாள் தபவாழ்வுக்கு அழைத்துச் சென்றது. எனவே கத்தோலிக்க மக்களாகிய நாம் திருச்சபையின் சட்டமாகிய நாற்பதுநாள் தபசுகாலத்தை எமது எதிர்காலத்தில் சாத்தானின் சோதனைகளிலிருந்து விடுபடும் சாதனமாகக் கொண்டு அதை வெற்றிகரமாக முடிப்பதற்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை முதலில் வேண்டுவோமாக.

# மாற்றம்

(ச. வில்பிரெட், மறை ஆசிரியர்)

ஆதவன் கிழக்கே உதிக்கிறான். மேற்கே மறைகிறான். பகல் மறைகின்றது; இரவு வருகின்றது. இரவும் பகலும் சக்கரம் போல் சுழன்று சுழன்று—மாறி மாறி—வருகின்றன. இது காலத்தின் மாற்றம்.

மழை பெய்தது; வெள்ளம் பெருகியது. நீர் வடிந்தது. பின் வெயில் அடித்தது. வெப்பம் அதிகரித்தது. அன்று மாரிப்பருவம் மறைந்து விட்டது. இன்று கோடைப்பருவம். இது பருவத்தின் மாற்றம்.

அன்று மேகம் சூழ்ந்திருந்தது. விண்மீன்களைக் கண்டோமில்லை. இன்றோ மேகம் மறைந்துவிட்டது. மின்னல் ஓய்ந்துவிட்டது. வானம் வெறுமையாய்த் தோன்றுகின்றது. விண்மீன்கள் கண்சிமிட்டி காட்சி தருகின்றன. அன்றிருந்த இயற்கைநிலை மாறிவிட்டது. இது இயற்கை நிலையின் மாற்றம்.

மனிதன் அன்று நடந்து சென்றான். இன்று பறந்து செல்கிறான். அன்று மாட்டு வண்டியில் சென்றவன் இன்று நிலா வாகனத்தில் செல்கிறான். இன்று அவன் பயணநிலை மாறிவிட்டது. இது பயணத்தில் மாற்றம்.

அன்று மனிதன், செய்தியை நேரில் சென்று கொடுத்தான், அல்லது பறவைகள் (புறா)மூலம் கொடுத்தான். இன்று தொலைபேசிகள் மூலம் நேரடியாகச் செய்தியை அனுப்புகின்றான். வானொலி மூலம் வானிலே பரப்புகின்றான்; இது மனிதனின் செய்தித்துறை மாற்றம்.

அன்று மாடுகளைக்கொண்டு, கலப்பையால் வயலை உழுதான்; நிலத்தைப் பண்படுத்தினான். இன்று இயந்திரங்களைக்கொண்டு சொற்ப நேரத்தில் அனேக நிலங்களை உழுகின்றான்; பண்படுத்துகின்றான்; விதைக்கின்றான்; விதை மணிகளைக் குவிக்கின்றான். இது தொழிலில் மாற்றம்.

சில ஆண்டுகளுக்குமுன் அது ஒரு குழந்தை. இன்று அவன் ஒரு வாலிபன். இன்னும் சில ஆண்டுகளின்பின் அவர் ஒரு முதியவர். இது மனித வளர்ச்சியின் மாற்றம்.

அன்று வாயினால், பாடங்களைப் படிப்பித்தான் ஆசிரியன். இன்று பலகருவிகளைக் கொண்டு,–சாதனங்களைக் கையாண்டு கல்வி புகட்டுகின்றான், நேரடியாகக் காட்டி அறிவூட்டுகின்றான். புலனில் பதியச் செய்கின்றான். இது கல்வியின் மாற்றம்.

அன்று கிரகோள்கள் எட்டாத தொலைவில் உள்ளன, அவற்றை அணுக முடியாது என்றான். இன்று உலகம் கிட்டிவிட்டது. ஒரு நாட்டிற்கும் மற்றோர் நாட்டிற்கும் உள்ள தொலை குறுகிவிட்டது என்கிறான். அன்று உலகம் தட்டை என்றான். இன்று அது உருண்டை என்கிறான். அன்று சில நோய்களைக் குணப்படுத்த முடியாது என்றான். இன்று முடியும் என்கிறான். அன்று இயற்கையின் சில சக்திகளைக் கட்டுப்படுத்த முடியாது என்றான். இன்று கட்டுப்படுத்துகிறேன் பார் என்கிறான். அன்று அறிய முடியாதிருந்தது சில; இன்று அவனுக்கு அறிவைத் தருகின்றதுபல. இது மனித அறிவின் மாற்றம்.

இப்படியே உலகின் மாற்றங்களை மாறி மாறி வரைந்து கொண்டே போகலாம். எங்கு நோக்கினும், மாற்றம்! எவ்விடம் பார்க்கினும் மாற்றம்! மாற்றம்!! என்ற பேச்சுத்தான். ஆம். அன்னை திருச்சபை இதற்கு விதிவிலக்கல்ல. ஒதுங்கி வாழ்ந்ததல்ல.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# தவக்கால
# திருப்புகழ்மாலைக் கீதங்கள்

(O Sol Salutis)

**1 காலைக் கீதம்**

1. இரவு அகன்று உலகின்மேல்
அருளின் பகலே வருகையிலே
மீட்பின் சோதி யேசுவே
காட்சி அளியும் உளங்களிலே.

2. கண்ணீர் ஆறாய் ஓடியே
கழுவும் இதய பலிப்பொருள்
மகிழ்ந்து அன்பால் எரியவே
உகந்த காலம் தந்தருளும்.

3. தவமாம் கோலின் தண்டனையால்
பவமே சாக்கும் கனைஎன்னும்
இருதய கடினம் கரைந்திடுமே
சொரியும் கண்ணீர் அருவியென்றே.

4. வந்ததே உமது சொந்ததினம்
எந்த உயிரும் மலர்ந்திடுநாள்
வலதுகையால் நேர்வழி நடத்த
பலதுயர் நீங்கி மகிழ்ந்திடுவோம்.

5. மூவொன்றும் தயைக் கடவுளுமை
யாவுமுலகோ டடிபணியும்
புதிதாயருளால் மாறிய நாம்
புதிய பாட்டைப் பாடுவமே.

* * *

(Audi Benigne Conditor)

**2 மாலைக் கீதம்**

1. நாற்பது நாளாய் மனம்நொந்து
நோற்குமடியோ ரைமைநோக்கும்
வளமாயெம்மைப் படைத்தவரே
அழுதுவேண்டும் செபம் கேளும்.

2. உற்பன மூள்ளது காண் தூயா
அற்பரெம் சக்தியை யறிவீர் நாம்
மறுத்து உன்பதம் திரும்பிவந்தோம்
பொறுத்தல் அருளை அளித்திடுவீர்.

3. மிகவும் செய்தோம் பாவங்கள்
அறிக்கை செய்தோம் பொறுப்பீரே
எமது நோயை மாற்றிவிடும்
உமது பெயரின் மகிமைக்காய்.

4. உடலைப் பகியால் ஒடுக்கிவிடக்
கெடுவே தாரும் நோன்புசெயும்
திட்ட இதயங்கள் நொருங்கி
குற்றமா முணவைக் கைவிடவே.

5. பாக்கியமான திரித்துவமே
மோக்ஷமான ஏகத்துவமே
நோன்பின் பலன்களடியோர்க்கு
நிறைவாய்க் கிடைக்க அருள்வீரே.

# அகில இலங்கை மறைக்கல்வி மகாநாட்டு நினைவு மலர்

## முன்னுரை

கடந்த ஆண்டு **மார்கழித் திங்களில் யாழ்நகரில்** நடந்தேறிய அகில இலங்கை மறைக் கல்வி மகாநாட்டின் நினைவு மலருக்கு முன்னுரை ஒன்று எழுதும்படி கேட்கப்பட்டுள்ளேன். இவ்விண்ணப்பத்தை மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். ஏனெனில், மகாநாட்டின் குறிக்கோள் தற்போதைய பாடசாலைச் சூழ்நிலையில் மறைக் கல்வியூட்டுவதில் கிறீஸ்தவ குடும்பங்கள் வகிக்க வேண்டிய இடம் என்ன என்பது பற்றி ஆராய்தலாகும். இஃது எமது முக்கிய கவனத்துக்குரியது. எல்லாக் கிறீஸ்தவ குடும்பங்களும் தம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை உருவாக்கும் இயக்கத்தில் தமக்குரிய இடத்தை வகிக்கவேண்டும்.

பல மேற்றிராசனங்களிலும் இருந்து வந்த பிரதிநிதிகள் ஏகோபித்து எடுத்த தீர்மானங்கள் நமது கவனத்திற்குக் கொண்டு வரப்படல் வேண்டும். எல்லா மேற்றிராசனங்களிலும் மரியாயின்சேனை, பெற்றோரின் மறைக்கல்வி இயக்கத்தில் எடுக்கும் கரிசனை பாராட்டத்தக்கது. இவ்வியக்கத்தில் நமது மறைக்கல்வி நடுநிலையங்களோடு மரியாயின்சேனை ஒத்துழைப்பது பலன் அளிக்கும்.

முதல் இரு தீர்மானங்களும் சிறப்பாக நடைமுறைக்கு எடுக்கப்படவேண்டியவை. அவையாவெனில்: பெற்றோர் மன்றங்களும், திருமறைக் கல்விச் சபைகளும் நமது விசாரணைப் பங்குகளில் அமைப்பதே. இம்மறைக் கல்வி இயக்கத்தில், சிறப்பாக நமது மேற்றிராசனத்தில் உள்ள பங்குக்குருவர்களுடைய அயராத ஒத்துழைப்பைக் கோருகின்றோம். இவ்வியக்கம் வருங்கால விசுவாச வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வழியாகும். இறைவனின் அரும்பெரும் ஆசீர்வாதங்கள் இவ்வியக்கத்தில் ஈடுபடுகிறவர்கள்மேல் பொழியப்பட வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

✠ யே. எமிலியானுஸ்பிள்ளை, ஓ. எம். ஐ.
யாழ். மறைஆயர்.

ஆவலுடன் ஆண்டுகள் பல காத்திருந்த ஆசை நிறைவேறியது. அது இலங்கை வாழ் தமிழ்க் கத்தோலிக்கர்கள் அனைவரும் ஒன்று கூடித் தமது மறையைப்பற்றி ஆழமாக அறிய ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கியதுதான்; அதுவும் யாழ்ப்பாணத்தில். இந்த கன்னுள் ஒருநாளில்லல்ல, இரு நாட்களில் மிக்க ஆயத்தத்துடனும் தகுந்த ஏற்பாடுகளுடனும் பொன்னுளாக அமைந்தது.

இலங்கையிலுள்ள அத்தனை மேற்றிராசனங்களிலுமிருந்து பிரதிநிதிகளும், யாழ்ப்பாண மேற்றிராசனத்திலுள்ள பங்குகளிலிருந்து பிரதிநிதிகளுமாக ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இம் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

மார்கழி 15ஆம் நாள், அதுதான் இம் மகாநாட்டின் ஆரம்பநாள். காலை 9-30 மணிக்கு யாழ்நகர் ஆயர் குத்துவிளக்கு ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். மேடையில் மற்றும் உதவி ஆயர்கள் B. தியோகுப்பிள்ளை, L. R. அன்ரனி அவர்களும் யாழ்ப்பாண மேற்றிராசன மறைக் கல்விக் குழுவின் அதிபர் அருட்திரு. G. T. பாலசுந்தரம், மட்டக்களப்பு அதிபர் H. பொன்னையா அடிகள் முதலியோர் அமர்ந்திருந்தனர். விழாத் தலைவர் மறைக் கல்வியின் அவசியத்தையும், இம் மகாநாடு பல கஷ்டங்களுக்கு மத்தியில் நடைபெறுவது பற்றித் தமது மகிழ்ச்சியையும் தெரிவித்து சுருக்கமாகத் தமது தலைமையுரையை முடித்துவிட, மகாநாட்டின் முதல் பேச்சாளர் உதவி ஆயர் B. தியோகுப்பிள்ளை ஆண்டகை "பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதில் பெற்றோரின் பங்கு" என்ற பொருள் பற்றிப் பேசுகையில், பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டுவது பெற்றோரின் இயற்கை உரிமை எனவும், பெற்றோர் தமது சொல்லாலும் முன்மாதிரியாலும் தங்கள் பிள்ளைகளுக்கு மறைப் பயிற்சி அளிக்கவேண்டுமெனவும், பாடசாலைகளில், பங்குகளில் மற்றும் நிறுவனங்களில் அளிக்கப்படும் மறைக் கல்விமட்டுமல்ல கூடிய அக்கறை கொள்ள வேண்டுமெனவும் எடுத்துரைத்தார். பாடசாலைகளில் அளிக்கப்படும் மறைக் கல்வியின் தரம் குறைந்து வருவதால் பெற்றோர் திருச்சபையின் பல்வேறு நிறுவனங்களின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து, அவைகளோடு ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். ஆண்டகையின் பேச்சையடுத்து தேநீர் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சமூகமளித்தவர்கள் 21 குழுக்களாக பேச்சாளரால் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கப் பிரிந்தனர்.

கலந்துரையாடலின் பின்பு அனைவரும் இம் மகாநாடு நடந்த புனித பத்திரிசியார் கல்லூரி ஆலயத்துக்குள் கூடினர். கூட்டுப்பலியில் பங்கு பெற, அதற்கு யாழ்ப்பாணத் துணை ஆயர் தலைமை தாங்கினார். பலியின்போது ஒவ்வொரு கிறீஸ்தவனும் நற்செய்தியைப் பரப்பவேண்டிய கடமையை ஆகம நிகழ்ச்சிகளிலிருந்து ஆதாரங்களுடன் அழகுற எடுத்தியம்பினார் வண. பொன்னையா அடிகள். மதிய உணவிற்காக அனைவரும் பிரிந்தனர். யாழ்நகரின் பங்குகளிலிருந்து வந்த பிரதிநிதிகளுக்கும் மற்றையோருக்கும் இலவசமாக உணவு வழங்கப்பட்டது.

முதல்நாளில் இரண்டாவது பேச்சரங்கை ஆரம்பித்துத் தலைமை தாங்கியவர் அருட்திரு. பொன்னையா அடிகள். பேச்சாளர் திருமதி அந்தோனியா சாமிநாதர், யாழ்ப்பாண மாநகர உறுப்பினரும், சமாதான நீதிபதியும் தலைசிறந்த அனுபவமுமுள்ள ஆசிரியையுமாவர். அவரது சொற்பொழிவு கருத்துச் செறிந்ததும், மனோதத்துவ சாத்திர அறிவுரைகள் நிறைந்ததாகவும் அமைந்தது. "பாடசாலைக்குச் செல்லுமுன் பிள்ளைகளுக்கு மறைப்பயிற்சி அளித்தல்", என்னும் பொருள் பற்றியே அவர் பேசினார். குழந்தையின் உள்ளம் இறைவன் குடிகொள்ளும் கோவில் என்பதைப் பெற்றோர் உணர்வதுடன், பிள்ளை அறியவும் உணரவும் உதவிபுரிய வேண்டும். உருபிகர மனப்பான்மையைப் பயன்படுத்தி மூடநம்பிக்கை, சகுன சாத்திரங்களைப் பாலர் உள்ளங்களில் இடம்பெறாது செய்தல்வேண்டும். மேலாகக் கடவுளின் அன்பைத் தனது தாய் தந்தையரில் பிள்ளை காணவும், உணரவும் ஆவன செய்யவேண்டும். மேற்கூறியவை அவர்களின் பேச்சில் உதிர்ந்த முத்துக்களில் சில.

பேச்சினைத் தொடர்ந்து கலந்துரையாடல் ஆரம்பமானது. கலந்துரையாடல்களுக்காகக் கொடுக்கப்பட்ட கேள்விகள் அதிகமானவைகளாக இருந்தமையினாலும், சிலர் தங்கள் சொந்தக் கருத்துக்களையே கூறவந்தமையினாலும் இன்றைய பொது அரங்கு ஒழுங்கற்றதாகவும், உரைகள் இரசிப்பற்ற நீண்டவைகளாகவும் அமைந்தன. முழுநாளும் உன்னிப்பாகக் கேட்டும், சிந்தித்துக் கலந்துரையாடியுமிருந்தோருக்கு மாலை நிகழ்ந்த சதம்பநிகழ்ச்சிகள் சிந்தைக்கு விருந்தாக விருந்தன. இந்நிகழ்ச்சிகளை ஒழுங்குபண்ணியவர் அருட்திரு. சவரிமுத்து அடிகள். அவருடைய கலையார்வம் ஓங்க வாழ்த்துகின்றோம்.

இரண்டாவது நாள் அருட்திரு. G. T. பாலசுந்தரம் அடிகளின் தலைமையில் இறை வணக்கத்துடன் ஆரம்பமாகியது. அன்று காலைப் பேச்சாளர் வேறு யாருமல்ல பிரான்சிஸ்கன் மிஷனரிக் குழுவைச் சேர்ந்த சங். சகோதரி ரேஸ். அவருக்குக் கொடுக்கப்பட்ட தலையங்கம் நீளமானதும் கடினமானதாயினும், தமது அறிவுத் திறனாலும், அனுபவத்தினாலும் கேட்டுக்கொண்டிருக்கச் சுவையுள்ளதாக அமைத்துவிட்டார்.

"திருவருட்சாதனங்களைப் பெறுவதற்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தல்" என்பது பற்றிப் பேசுகையில் அவர் அள்ளிச்சொரிந்த அறிவுரைகளில் சில: குடும்ப சீவியமானது ஒவ்வொருவரும் தம் சீவியத்தின் நோக்கத்தை நிறைவேற்ற உதவுகின்றது. கடவுளுடன் ஒன்றித்தலாகிய நித்திய சீவியம் குடும்ப சீவியத்தில் தொடங்குதல் வேண்டும். இந்த ஐக்கியமானது பலனளிக்கக் கடவுளின் அருள்தான் உதவிசெய்யும். பரிசுத்த சீவியத்தின் பிரதானமான அடித்தளம் தேவ திரவிய அனுமானங்களே. இவைகளைப் பிள்ளைகள் பெறுவதற்குப் பெற்றோர்கள் தங்கள் குடும்பத்தில் நடக்கும் அன்றாடச் சம்பவங்களைக் கொண்டு விளக்கி ஆயத்தம்பண்ண வேண்டும். ஒரு குழந்தை ஒரு குடும்பத்தில் பிறந்தால் நாங்கள் அக்குழந்தையைத் திருமுழுக்கு என்னும் தேவதிரவிய அனுமானத்திற்கு ஆயத்தப்படுத்த முடியாது, ஆனால் நிச்சயமாக வீட்டில் உள்ள மற்றப் பிள்ளைகளை அக்குழந்தைச்சகோதரத்தின் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்த வேண்டும். திருமுழுக்குப் பற்றி அவர்களுடன் கதைப்பதற்கு இதுதான் தக்கசமயமாகும். தேநீர் இடைவேளைக்குப் பின்பு கலந்துரையாடலுக்காகச் சபையினர் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

இன்றைய கூட்டுப்பலியில் தலைமைதாங்கியவர் துணை ஆயர் B. தியோகுப்பிள்ளை. திருப்பலியின்போது கண்டி மேற்றிராசன மறைக்கல்வி நிலைய அதிபர் சின்னப்பு அடிகள் திருவுரை நிகழ்த்தினார். பிறர் அன்பு இறையன்பென எடுத்தோதினார். தாயுமானவரின் பாடல்கள் அவர் வாயிலிருந்து சுவைததும்ப இசைத்தன. திருப்பலியின்போது கூடியிருந்தோர் அனைவரும் பாடல்களிலும் செபங்களிலும் ஒன்றுகூடிப் பங்குபற்றியது யாவரதும் மனதைக் கொள்ளைகொண்டது. இதுவல்லோ எமது பங்குகளில் தினமும் நடைபெறும் இறை ஆராதனையாக இருக்க வேண்டியதென எண்ணியவர் பலரிருந்தனர். மதிய உணவிற்குப் பின்பும், கலந்துரையாடல்கள் நடைபெற்றதைக் கண்டேன். காலையில் முடிந்திராத கேள்விகளுக்குப் பதில் அளிக்க அவ்வளவு ஆர்வமும் உற்சாகமும் அவர்களிடையே இருந்தன. பல குருக்களும், கன்னியர்களும பங்குபற்றி உற்சாகமூட்டினர்.

மகாநாட்டின் இறுதிப் பேச்சாளராக மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரியின் தற்போதைய துணைத் தலைவர் திரு. L. M. யோசப், B. A. அவருடைய பேச்சு இன்றைய இளைஞர்களின் பிரச்சினைகளைப்பற்றியது. இவ்விளைஞர் இன்றைய உலகில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு மாபெரும் சக்தி, அணுச் சக்தியைவிட உயர்ந்தது. அதனை நன்மைக்கும் தீமைக்கும் பாவிக்கலாம். இளைஞர்கள் உலகத்தினை அறிந்தவர்கள். வேகமாகக் கற்று குறுகிய காலத்தில் முதிர்ச்சியடைகின்றார்கள். பொதுவில் வெளி அமைப்பு முறைகளை, சொல்லிலும் செயலிலும் காணப்படும் ஒற்றுமையீனத்தை, வெறும் வெளிப்பாட்டுக்களை வெறுத்து, நேர்மை, நியாயம், கண்ணியம் போன்றவற்றை வரவேற்கின்றார்கள். எனவே அவர்களது இன்றைய பிரச்சினைகளுக்குப் பழைய விடைகளும், வழிகளும் திருப்தியளிப்பதாகவில்லை. மூத்தோர் திட்டங்கள் தோல்வியுற்றுச் செயலற்றுவிட்ட சந்தர்ப்பங்கள் பலவற்றை நேரில் கண்டிருக்கிறார்கள். இத்தோல்விகளை இனிமேலும் மூடிமறைக்க முடியாது. இது மறைவாழ்வி விருப்பதையும் மறையுண்மையை எடுத்துரைப்போர் வாழ்க்கை அவ்வுண்மையின் அடிப்படையில் அமையாதிருப்பதையும் காண்கின்றனர். உண்மையான அர்த்தமும் பொருத்தமுமில்லாத இறைவழிபாடுகள் இருப்பதைக் கண்டு மனங்கோணிப் போகிறார்கள்.

பேச்சாளரின் துடிப்பும் ஆழமுமான கருத்துக்கள் சமூகமாயிருந்தோரைச் சிந்திக்க வைத்ததைப் பொது அரங்கில் கலந்துரையாடல்களின்போது கிடைத்த விடைகளிலிருந்து அறிய முடிந்தது. இன்றைய இளைஞர்களுக்குப் பெற்றோர், ஆசிரியர், குருகுலம் ஏற்ற வழிகளில் வழிகாட்ட முன்வந்தது, எந்த இளைஞனினதும் இதயத்தைக் குளிரப்பண்ணியிருக்கும். மூத்தோர் குலத்திற்கு இளைஞரின் சார்பில் நன்றி.

எமது மகாநாட்டின் இறுதிக்கட்டம், சிந்தித்தவைகளைச் செயல்படுத்தல். கலந்துரையாடல்களில் கண்ட உண்மைகளில் சில செயல் திட்டங்களாக உருவாக்கி அமைத்தனர், அவை இக்கட்டுரையின் இறுதியில் காணப்படுகின்றன. நன்றிக்கடன் நவில முன்வந்த ஆசிரியர் மிராண்டா அவர்கள் இம் மகாநாட்டினை மாபெரும் மகிழ்ச்சிகரமாக அமைத்த அனைவரையும், குறிப்பாக யாழ்ப்பாண மறைக் கல்வி அதிபர் அருட்திரு. G. T. பாலசுந்தரம் அடிகளின் அயராத உழைப்பையும் ஆர்வத்தையும் எடுத்துரைக்கத் தவறவில்லை. இறுதியாக இறைவனையும் போற்றிப்புகழ நன்றிக்கடன் செலுத்த அனைவரும் ஆலயம் புகுந்தனர். என்றோ இதுபோல இன்னோர் மகாநாடு! என்று ஏங்கிய பல உள்ளங்களில் எனதும் ஒன்று.

### மறைக்கல்வி மகாநாட்டில் ஏற்கப்பட்ட தீர்மானங்கள்

1. பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தகுந்த முறையில் மறைக்கல்வி ஊட்டுவதற்கு, உறுதுணையாக ஒவ்வொரு பங்கிலும் பெற்றோர் மன்றம் அமைக்கப்பட்டு அது நன்றாக இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.
2. ஒவ்வொரு பங்கிலும் கிறீஸ்தவ திருமறைக் கல்விச் சபை கூடிய விரைவில் நிறுவப்படவேண்டும்.
3. பிள்ளைகளுக்கு, மறைக் கல்வி ஊட்டுவதற்குப் பெற்றோரைப் பயிற்றுவதற்கு உதவக்கூடிய பிர

(மறுபக்கம் பார்க்க)

## அநேகர் கிழக்கிலும்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யான விசுவாசம் படைத்தோருக்கு — தம்மை யாரென அறிந்து, பூரண நம்பிக்கை கொள்வோருக்கு — தமது இனிய அன்பின் கற்பனைகளைப் பிழையின்றி அனுசரிப்போருக்கு யேசுநாதரே அவனுக்குச் சொன்னதுபோல் சொல்லுவார்: "நீ விசுவசித்தது போல் உனக்கு ஆகக்கடவது" என்று. இவ்விதமான பூரண விசுவாசமும், திடமான நம்பிக்கையும நம்மிடம் உண்டா?

யேசுநாதர்கூறிய இவ்வருள் வாக்குகளை நாம் அறிந்து சிந்திக்கிறோமா? கிறிஸ்துவின் இனிய நாமத்தைத் தரித்து, அவரது இராச்சியத்தின் மக்கள் என்று உரிமைகூறும்நாம் யேசுநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரேதிருச்சபையின் உண்மைப் போதகத்தையும் முழுமையான கற்பனைகளையும் கைக்கொள்கின்றோமா? அவருடைய புனித வாழ்வைப் பின்பற்றுகின்றோமா? கிறிஸ்தவ கடமையைச் சரிவர அனுசரிக்கிறவர்கள் எத்தனைபேர்? அவர் அனுப்பிய தூயஆவியானவரின் ஏவுதல்களுக்கு அப்போஸ்தலரின் அழைப்புக்களுக்குச் செவிசாய்ப்பவர்கள் எத்தனை பேர்? மாறாகத் திருச்சபையின் போதகத்தில் பிழை பிடிப்பவர்களும் அவற்றைத் தமதிஷ்டப்படி மாற்றியமைக்க முனைநிற்போரும் தங்கள் வாழ்வு முழுவதையும் தேவனுக்கென அர்ப்பணித்த குருமார், சந்நியாசர், கன்னியரைப்பற்றி அவதூறு பேசுவோரும், பிறமதத்தவர்கள் மத்தியில் துன்மாதிரி காட்டுவோரும், விசுவாசத்துக் கெதிரான கதைகளைப்பரப்பி,செயல்களைப் புரிந்து, கேட்டின் பாதையில் சென்றுகொண்டிருக்கும் பரிதாபத்துக்குரிய ஆன்மாக்கள் எத்தனை எத்தனை?

இவர்களால்மலர்ச்சியடைய வேண்டிய திருச்சபை புரட்சியடைந்து தூயஆவியானவரின் வார்த்தை இன்று இரந்து கேட்கின்றது. பாரபட்சமற்ற இறைவன் யார் யார் அவரை விசுவசித்து அவரை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் தேவ புத்திரர் ஆகும்படி அவர்களுக்கு அருளையும் அருட்கொடைகளையும் வாரி வழங்குகிறார். தத்தம் இதயக் கதவுகளை அகலத் திறப்பவர், இறைவனின் பூரண நிறைவை அங்கே கண்டடைவர். இறைவன் சமூகத்தில், யூதனென்றும் புற ஜாதியானென்றும், அடிமையென்றும் வித்தியாசமில்லை. யாவரும் நம் பரலோக பிதாவினால் படைக்கப்பட்ட ஒரே பரிசுத்த குடும்பத்தின் பிள்ளைகள் என்பதை நாம் உணரவேண்டும்.

எனவே, இராட்சியத்தின் மக்களாகிய நாம் புறம்பான இருளிலே தள்ளப்படாமல், நமக்குக் கிடைத்த மிகச் சொற்பமான இவ்வுலக யாத்திரைக் காலத்தைப் பயன்படுத்தி, நம் மீட்பராம் யேசுநாதர், தம்மையே தெய்வீக உணவாகத் தந்த திவ்விய நற்கருணைப் பந்தியில், பங்குபற்றி தேவபுத்திரராகி, விண்ணரசிலும் தேவ ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்குபெறும் பாக்கியசாலிகளாவோம். — நாதன்

## ஆனந்தம் கண்டுகொண்டேன்

ஏடெடுத்த நாள்முதலாய் அறிவின் ஊற்றாய்
எல்லாமே நீயுமாய் என்னில் நின்றாய்;
பாழாகி பாழ்பட்டு அழிந் தொழிந்து
பாவியனாய் உழலாமல் நாளும் காத்தாய்.

நீதான வெந்துயர வாழ்வில் என்னை
திருவழிந்து உருவழிந்து அருளே அற்று;
போகாமல் கடைத்தேறக் கருணை செய்த
அருட்சுடரே அம்மாவே மறவேன் உன்னை.

பலர்பழித்து சிலர் சிரிக்க உலகம் தன்னில்
வாழ்வதுவே சூனியமாய் வலிமையற்று வாடாமல்;
வாழ்வாங்கு வாழவென்னை வளமுடனேவைத்தபெற்றி
உனையன்றி எவர்க்குண்டு? இவ்வுலகில் இந்தவெற்றி.

துறைவிட்டு நீர்கிழித்து செல்லும் கப்பல்
சிறுதூரம் சென்றுவிட்ட நிலையில் நானும்;
அலைப்புற்று, களைப்புற்று கொந்தன் உந்தன்
அருள் கண்டேன் ஆனந்தம் கண்டுகொண்டேன்.

நெடுந்தூரம் நீள்பயணம் வாழ்க்கைப் பாதை
நிலையாமை உயிர்வாழ்க்கை உணர்வேன் உண்மை;
அஞ்சாமை கொண்டு மனம் துணிந்துவிட்டேன்
அருள்தாராய் நீயிருக்க பயமொன் றுண்டோ?

( ஐயா ஜோசப் )

**சிலுவையின் வழி சீவியம்**

(புதிய சிலுவைப்பாதை)
தனிப் பிரதியின் விலை 15சதம்
தனிப்பிரதி அனுப்ப தபாற்செலவு சதம் 10
50 பிரதிகளுக்கு 90சதம்

கிடைக்குமிடம்:
கட்டளைக் குரவர், தேவ மாதா கோவில், ஊர்காவற்றுறை.

## பாலர் தினம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளின் மனதில் தேவபாலனின் தூய்மையான வாழ்வைப் பதித்து அவர்களும் கிறிஸ்துநாதரது சுவிசேஷத்தின் தூதுவர்கள் என்பதை வறபுறுத்தி தேவபாலனை அன்னை மரியாளும் கைத்தாதை சூசையப்பரும் வளர்த்துவந்த விழிப்புடன் பெற்றோர் தமது செல்வங்களாகிய சிறுரின் வளர்ச்சியில் விழிப்பாய் இருக்கவேண்டுமென்பதை எடுத்துக்காட்டவே பரிசுத்த தந்தை இத் திருநாளில் விசேஷ கவனம செலுத்தி வருகின்றார். உலகின பல்வேறு பகுதிகளில இத் திருநாள் விசேஷ கவனத்துடனும பக்தியுடனும சிறுவர் மனதைக் கவரத்தக்க முறையிலும கொண்டாடப்பட்டது.

---

● ஜப்பானுக்கு வருடம் ஒன்றுக்குத் தேவைப்படும் அரிசி 11கோடியே 20லட்சம் தொன். ஆனால், அந்நாட்டிலுள்ள 80லட்சம் ஏக்கரிலும் வருடமொன்றுக்குப் 17கோடியே 50லட்சம் தொன் அரிசி விளைவிக்கப்படுகிறது. அதனால் மேலதிகமாகவுள்ள அரிசியை என்ன செய்வதென்று அறியாமல் ஜப்பானிய அரசாங்கம் திண்டாடுகிறது.

● உலகின் மிகப்பெரிய நூலகமாகிய பிரித்தானிய நூல்நிலையம 90லட்சம் நூல்களையும், பெருந்தொகைப் புராதன சுவடிகளையும் அடக்கியுள்ளது. சமீபகாலமுதல் அதில் ஏற்பட்டிருக்கும் இடநெருக்கடி காரணமாக 3கோடியே 60லட்சம் பவுண் செலவில் பிரமாண்டமான புதிய நூலகம் ஒன்று கட்டப்படவிருக்கிறது. இதைக் கட்டி முடிக்கப் பத்துவருடங்களுக்குமேல செல்லும். அப்பொழுது அது உலகில் ஈடிணையற்ற ஒரு தேசிய நூலகமாகக் காட்சியளிக்கும்.

● ஜேர்மனியிலே லீடன் நகரிலுள்ள பீங்கான்கள்செய்யும் தொழிற்சாலையில் ஒரு புதிய சாதனை ஏற்பட்டிருக்கிறது. அதிலே தானாக இயங்கும் ஒரு யந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இதிலே பீங்கான் செய்யும்மூலம் பொருளையும், தண்ணீரையும் செலுத்திவிட்டால் அது தானாக இயங்கிப் பீங்கான் பாத்திரங்களைச் செய்து விடுகிறது. இதுவும் ஜேர்மன் நிபுணர்களின் புதிய சாதனையாகும்.

● ஆழ்கடலிலே புதைந்து கிடக்கும் நிலக்கரியை தோண்டியெடுப்பதற்கென்று ஜேர்மன் நிபுணர்கள் அபூர்வமான யந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துச் செய்திருக்கிறார்கள். கடலிலே 2,000 மீற்றர் ஆழத்திலிருந்து தானும் நிலக்கரிபடிவங்களை இந்தயந்திரத்தின் நீண்ட செயற்கைக்கரங்கள் தோண்டியெடுத்துப் பூமிக்கு அனுப்பிவிடுகின்றன. இதன் பெயர் "ஓடின் டிறட்ஜ்".

● இங்கிலாந்திலே லூத் நகரிலுள்ள சம்மிக் கேலின் அங்கிளிக்கன்சபைக் கோவிலின் முன்னாள் பாதிரியாரான வண. நோமன் பிறுங் அவர்கள் அங்கு சதாம்ரன் நகரிலுள்ள கத்தோலிக்க கல்லூரிச் சிற்றாலயத்தில் குருத்துவாபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறார். 12 வயதுடையவரான இவர் ஒரு பிரமச்சாரியாவர். 6935ஆம் ஆண்டு ஓர் அங்கிளிக்கன் பாதிரியாராக அபிஷேகம் செய்யப்பெற்றிருந்தார்.

## மாற்றம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிலும் மாற்றம். அதிலும் மறுமலர்ச்சி! பழையன கழிதலும், புதியன புகுதலும் இயல்புதானே. அன்றிருந்த சில இன்றில்லை. அன்றிருந்த சில பழக்கங்கள் இன்று இல்லை. அன்றிருந்த சில வழிபாடுகள் இன்று இல்லை. அன்றிருந்த ஆசாரம் இன்று இல்லை. அன்றிருந்த மொழி இன்று இல்லை. அன்றிருந்த செபம் இன்று இல்லை. அன்றிருந்த மெழுகுதிரி இன்று இல்லை. புதியன புகுந்துவிட்டது. பழையன புறக்கணிக்கப்பட்டது. இது திருச்சபையின் மாற்றம்.

அன்று இருந்தது, கிறிஸ்து பிறப்புக் காலம் — இறைந் தோற்றக்காலம். இன்று இருப்பது தவக்காலம். இது திருச்சபையின் வழிபாட்டுக்கால சக்கரத்தின் சுழற்சி (மாற்றம்). ஆம், அன்று பச்சைப்பசேரென்று பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று காட்சி தந்தனபச்சை நிற ஆடை. பீடத்தில் பச்சை. நற்கருணையில் பச்சை. குருவின் ஆடையில் பச்சை. விபூதித் திருநாளுக்கு முன் தினத்தோடு பச்சை மறைந்தது. மாறிவிட்டது. புதியநிறம் புகுந்து விட்டது. இன்று ஊதா நிறம் காட்சி தருகின்றன: பீடத்திலும், பேழையிலும், ஆடையிலும். மாற்றம்! மாற்றம்!! மாற்றம்!!!

ஆடையில் ஏன் இந்த மாற்றம். பச்சை நம்பிக்கையின் சின்னம். கிறிஸ்து பிறந்து விட்டார். நமக்கு மீட்பு கிடைத்து விட்டது என்ற நம்பிக்கையில் வாழ்ந்தோம். இது பச்சை நிறம். ஆனால், ஊதா சோகத்தின் நிறம். மனவருத்தத்தின் நிறம். உண்மை. மனமாற்றத்தையே தவக்காலத்தில் மிளிரும் ஊதா எமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. மகனே! மகளே!! மனம் மாறு என்று மறைமுகமாகக் காட்டி நிற்கின்றது.

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். இதோ பாலைவனத்தில் குரலொலி கேட்கின்றது.

"பாவ மன்னிப்படைய மனம் மாறி ஞானஸ்நானம் பெறுங்கள்" மனம் திரும்பியவருக்கேற்ற செயல்களைச் செய்து காட்டுங்கள்" என்று பறைசாற்றி அழைத்தார் திருமுழுக்கு அருளப்பர்.

"நாம் பாவ மன்னிப்பு அடைய வேண்டுமாயின் பள்ளங்களைப் போன்ற உள்ளங்களையுடையோர் மனஸ்தாபத்தால் அதை நிரப்ப வேண்டும். மலையையும், குன்றையும் போல், தலை நிமிர்ந்து ஆணவம்(கர்வம்) புரிவோர் தம்மையே இறைவன் சமூகத்தில் தலை குனிந்து தாழ்த்திக் கொள்ள வேண்டும். கோணலான பாதையில் செல்வோர் நேரிய பாதையில் நேர்வழியில் செல்ல வேண்டும். கரடுமுரடான போக்குடையோர் தம்மைத் திருத்தி நேர்மையாய் வாழவேண்டும்." இது மனிதர் மன்னிப்படைய மனதை, நடத்தையை, செயலை, எண்ணத்தை மாற்றி அமைக்க இறைவார்க்கினர் இசையாள் விடுக்கும் புத்திப் போதனை.

**புனிதர் புத்தகங்கள்**

| | |
|---|---|
| கோடி அற்புதர் அந்தோனியார் அம்மானை | 1·00 |
| யூதாததேயு மன்றாட்டுப் பிரார்த்தனை | 25 |
| பேரின்பக்காதல் | 25 |
| சித்தாகுலத் திரட்டு | 75 |
| நடுத்தீர்வை உலா | 75 |

முற்பணம் அனுப்பாத ஆடர்கள் கவனிக்கப்படமாட்டாது.

எழுதுங்கள்:
எஸ். எம். இன்னாசிமுத்து. உபதேசியார்
சென் தோமாஸ் வீதி,
மாதகல் P. O.

## அகில இலங்கை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சுரங்களை மறைக்கல்வி நடு நிலையங்கள் தயாரித்துப் பெற்றோர் மன்றமூலம் வழங்கவேண்டும்.

4. ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பிரதியாவது, புதிய ஏற்பாட்டின் பிரதியாவது இருக்க வேண்டும்.
5. உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனம் குமரப் பருவத்தில் பெறப்படுவதுதான் கூடிய பலனைக் கொடுக்குமென்று இச் சபை கருதுகிறது.
6. திருமணத்திற்கும் குடும்ப வாழ்விற்கும் வாலிபப் பராயத்தினரைப் பயிற்றுவிக்கும்பொருட்டு "கானா மன்றங்கள்" பங்குகள் தோறும் நிறுவப்படவேண்டும்.
7. பங்கு, வட்டார, மேற்றிராசன ரீதிகளில் கத்தோலிக்க வாலிப வயதினர்களுக்கென மன்றங்கள் அமைத்து, உதவிகள் அளிக்கப்படல் வேண்டும்.
8. கத்தோலிக்க இளைஞர்கள் மற்றும சமுதாயங்களைச் சேர்ந்த இளைஞர்களோடு சேர்ந்து பொதுநலனுக்காக உழைத்தல் வேண்டும்.

---

அடுத்த இதழில் மகாநாட்டின்போது உதவிஆயர் அதிவண. பி. தியோகுப்பிளஸ் ஆண்டகை "பிள்ளைகளுக்கு மறைக்கல்வி யூட்டுவதில்பெற்றோரின்பங்கு" என்ற பொருள்பற்றி நிகழ்த்திய பேச்சு இடம்பெறும்.

---

● வருகிற ஆடி மாதம் ஆரம்பமாகும் புதிய வருடத்தின் வரவு செலவுத் திட்டத்திலே அமெரிக்க அரசாங்கம் தனது தேசபாதுகாப்புக்கென அதிகபணம் ஒதுக்கியிருக்கிறது. இதற்குக்காரணம், ருஷியாவின் அணு ஆயுத கடற்படைப் பெருக்கத்தைச் சமாளிப்பதேயாகும். அதன் புதிய நிதிவருடவருமானம் 21,270கோடிடலர், செலவு 22,920டலர், அதனால் வரவிலும் செலவு தொகை 1,160 கோடிடலர் அதிகமாகும்.

---

இப்போதனையைக் கடைப்பிடித்தால் நமது மனதில் ஓர் மாற்றம் நிகழும். ஓர் திருப்பம் நிகழும்.

எனவே, தவக்காலம் நமக்கு சுட்டிக் காட்டுவது மனமாற்றம்! எண்ண மாற்றம்!! செயல மாற்றம்!!! நடத்தை மாற்றம்!!! வாழ்க்கை மாற்றம்!!! இவைகளையே.

ஆகவே, இப்புனித தவக் காலத்தில், மனம்மாறுவோம். மன்னிப்படைவோம். மகிழ்வெய்துவோம்.

## பூசை வழிகாட்டி

**பங்குனி — 1971.**

8. திங்கள் நாள் பூசை [ஊ]
வாசகம்: தானி. 9: 4—10
சுவிசேஷம்: லூக். 6: 36—38

9. செவ். நாள் பூசை [ஊ]
வாசகம்: இசை. 1: 10, 16—20
சுவிசேஷம்: மத். 23: 1—12

10. புதன் நாள் பூசை [ஊ]
வாசகம்: எரே. 18: 18—20
சுவிசேஷம்: மத். 20: 17—28

11. வியா. நாள் பூசை [ஊ]
வாசகம்: எரே. 17: 5—10
சுவிசேஷம்: லூக். 16: 19—31

12. வெள்ளி நாள் பூசை [ஊ]
வாசகம்: ஆதி. 37: 3—4, 12—13, 17—28
சுவிசேஷம்: மத். 21: 33—43, 45—46

13. சனி நாள் பூசை [ஊ]
வாசகம்: மிக்க. 7: 14—15, 18—20
சுவிசேஷம்: லூக். 15: 1—3, 11—32

14. ஞாயிறு நாள் பூசை [ஊ]
1ஆம் வாசகம்: யாத். 3: 1—8, 13—15
2ஆம் வாசகம்: 1கொரி. 10: 1—6, 10—12
சுவிசேஷம்: லூக்காஸ் 13: 1 - 9

*சத்தியவேத பாதுகாவலன்*

## பேராயரின் வெள்ளிவிழா

இறைவனின் சேவைக்கே தம் வாழ்வை அர்ப்பணித்து, ஓர் ஆயரின் பொறுப்புமிக்க பதவியை இருபத்தைந்து ஆண்டுகளாக வகித்து வருதல் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பாக்கியமே. இந்த அரிய பேறு பெற்றவர் கொழும்புப் பேராயரான மகாவந். கருதினல் கூறே ஆண்டவர் அவர்கள். இவ்வாரம் தமது அபிஷேகத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடும் இப்பெருந்தகையாருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கொழும்பு மேற்றிராசனத்தின் துணை ஆயராக இருந்து பேராயரான இவர், சின்னப்ப பாப்பரசரின் கரத்திலிருந்து செஞ்சிராவைப் பெற்று இலங்கையின் முதல் கருதினலாகத் திகழ்பவர்.

ஆழ்ந்த அறிவும், வேத ஞானமும் உடையவராயிருந்தபோதும், தமது அடக்கமான, இனிய சுபாவத்தினலும், எளிமை பொருந்திய புறவாழ்வினலும் மக்கள் மனதை வசிகரித்தவர். இறைவனிடத்தில் அவர் கொண்டுள்ள தூய அன்பு அவரது ஒவ்வொரு செயலிலும் பிரதிபலித்தது. ஆண்டில் முதிபவராயிருந்தும் உள்ளத்தில் இளமை நிறைந்தவர். பழமையிலிருந்து புதுமைக்குப் பாலம் வகுத்து இலங்கைத் திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு அயராதுழைத்தவர். இளம் ஆயர்களை தமக்குத் துணைவராகக் கொண்டு இளைஞர் நலனை நாடியவர். இத்தகைய ஆயர் பெருந்தகை தமது வெள்ளி விழாவைக் கொண்டாடும் வேளையில் அவரை உள்ளங் கனிந்து வாழ்த்துவதோடு அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்ய அருட்கொடைகளையும் உடல்நலனையும் இறைவன் அவருக்கு அருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறேம்.

* * *

## தட்டுப்பாடா?

காலத்துக்குக் காலம் ஏதாவது பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதும் அதனல் பொதுமக்கள் தொல்லைப் படுவதும் இந்நாட்களில் சகஜம். சிக்கனத்தைக் கடைப்பிடித்து வாழும், அல்லது வாழவேண்டுமென அரசாங்கம் விரும்பும் இக் காலத்தில் நினைத்தவை எல்லாவற்றையும் நுகர்வது முடியாத காரியம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனல் அத்தியாவசிய பொருள்களுக்குக்கூடத் தட்டுப்பாடு ஏற்படும்போது பொதுமக்கள் அதனல் பெரிதும் கஷ்டப்படுகிறர்களென்பதைச் சொல்லவேண்டியதில்லை. இந்தத் தட்டுப்பாடுகளுக்கு யார் காரணம் என்பது பற்றி அபிப்பிராய பேதங்கள் எழுகின்றன. அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள்தான் அதற்குக் காரணம் என வியாபாரிகளும், வியாபாரிகள்தான் கொள்ளை லாபம் பெறுவதற்காக செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றனர் என அரசாங்கமும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுகின்றனர். இதெப்படியிருப்பினும், தட்டுப்பாடு அதிகமாவதற்குப் பாவனையாளரும் காரணமாவார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒரு பொருளை எப்பாடுபட்டும் வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற வழக்கத்தைமாற்றி கிடைக்கக் கூடியவற்றைக்கொண்டு சமாளிக்கப் பழகுவதாலும், அறவிலைக்குப் பொருள்களை வாங்காதிருப்பதாலும் கள்ளவிற்பனைகளைத் தடுக்கின்றோம். சில மக்கள் பொருள் கிடைக்கவில்லையென்றவுடன் அச்சங்கொண்டு தேவைக்கு அதிகமாகவே அதைத் தேடித்தேடி வாங்கிக் குவிப்பதும் தட்டுப்பாட்டை அதிகரிக்கத்தானே உதவி செய்யும். மக்கள் இதை உணர்ந்து கட்டுப்பாடாகவும், பிறசிநேகத்துடனும் நடந்து கொண்டால் தட்டுப்பாடுகள் ஏற்பட்டபோதிலும் அவை அதிகரிக்காதவாறு பார்த்துக்கொள்ளலாம்.

# செய்திகள்

### ஆங்கில அறிவு அவசியம்

சுயபாஷையில் விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சியடையாவிடின் "ஆனேர்ஸ்" எனப்படும் கண்ணிய பட்டத்திற்குப் படிக்கமுடியாது. போதனை, கொழும்புச் சர்வகலாசாலைகளிலே விஞ்ஞான பாடத்தில் கண்ணிய பட்டத்திற்கான போதனை ஆங்கிலத்தில்மட்டும் நடைபெறவிருப்பதே இதற்குக் காரணம். விஞ்ஞானத்திலே கண்ணியபட்டப் போதனைமிகக் கடினமாகையால் அதனைச் சுயமொழியில் படிப்பிக்க முடியாதென்று சர்வகலாசாலை அதிகாரிகள் கூறுகிருர்கள்.

### பாம்புக்கடிக்கு நவீன புதிய சிகிச்சை

குருநாகலைச் சேர்ந்த போபிட்டிக் குடியேற்ற திட்டத்தில் வேலைசெய்துவந்த 22வயதுடைய டி. கே. ஜயதுங்கே என்ற கமக்காரர் விஷப்பாம்பு ஒன்றினல் தீண்டப்பட்டார். அங்குள்ள சுதேச விஷவைத்திய நிபுணர்கள் அதைப் பரிசோதித்துவிட்டு அவர் இறந்துபோய் விட்டாரெனத் தீர்மானித்தனர். ஆனல், அங்குள்ள ஆங்கில விஷவைத்திய நிபுணரான பியசேன செனெவிரத்தின அவரைப் பரிசோதித்துவிட்டு மூளைச்சத்திர சிகிச்சைசெய்து அவரைக் குணப்படுத்திவிட்டார். அவர் விஷப்பாம்பு தீண்டியவரின் கபாலத்தைத் திறந்து மூளையிலே தனது சத்திரசிகிச்சையைச் சித்திரமாக முடித்தார். சிகிச்சை பெற்றவரும் மயக்கம் தெளிந்து குணப்பட்டுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

### கடலட்டை ஏற்றுமதி

யாழ்ப்பாணத்திலிருந்து சமீபத்திலே 35,000ரூபா பெறுமதியான கடலட்டை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இத்துடன் 37,000 ரூபா பெறுமதியான சங்கு பாகிஸ்தானுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற தைமாதம் 52,000 ரூபா பெறுமதியான எழுதொன் கடலட்டை ஏற்றுமதி செய்யப்பட்டது. இது முன்னில்லாத ஒரு சாதனையாகும்.

### மிளகாய்க்குக் கட்டுப்பாட்டுவிலை

பொதுச் சந்தையிலே செத்தல்மிளகாயின்விலையையும் அரசாங்கம் விலைக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருக்கிறது. அதன்படி ஒரு றுத்தல் செத்தல்மிளகாய் விலை 3ரூபா 76சதம். ஆனல், கூப்பனுக்கு ஒரு றுத்தல்விலை 1ரூபா30சதமாக முன்போல இருந்து வரும்.

### தக்காளிப்பழ ஏற்றுமதி

யாழ்ப்பாணத்திலிருந்து இம்முறை ஏற்றுமதியான தக்காளிப்பழம் முந்திய இரு ஆண்டுகளிலும் பார்க்க அரைவாசியாகக் குறைந்துவிட்டதாகத் தெரியவருகிறது. இதற்குக் காரணம் தக்காளிப்பயிர் மழையினல் பாதிக்கப்பட்டமைதானும். முன்பு தக்காளிப் பழம் றுத்தல் ஒன்று 20சதமாகக் கொள்வனவு செய்யப்பட்டது. இம்முறையோ றுத்தல் ஒன்று 30சதமாகக் கொள்வனவு செய்யப்படுகிறது.

மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

### குருமார்களின் மறைக்கல்விக் கருத்தரங்கு

பண்டத்தரிப்புத் தியான இல்லத்தில் இம்மாதம் 10ஆம், **11**ஆம் திகதிகளில் மேற்படி கருத்தரங்கு நடைபெறும். முதல் பிரிவைச் சேர்ந்த குருமார்கள் 10ஆம் திகதியும், இரண்டாம் பிரிவைச் சேர்ந்த குருமார்கள் **11**ஆம் திகதியும் பங்கு பெறுவார்கள். கொழும்பு மறைக்கல்வி நடுநிலையத்தின் தலைவர் சங்: W. டொன்சில்வெஸ்ரர் அடிகள் உரைகளும், திரைப்படக் காட்சியும் நடத்துவார்கள்; நிகழ்ச்சிகள் காலையில் **8-45** மணிக்கு ஆரம்பமாகும். **11-30**க்கு கூட்டுப்பூசை நடைபெறும்.

ஜீ. ஸ்ரீ. பாலசுந்தரம்,
ஓ. எம். ஐ.

**1-3-71**

### மீண்டும் வேலை கிடைக்குமா?

விவசாயப் படையிலே தொடர்ந்து 600நாள் வேலை செய்தவர்களுக்குத் திரும்பவும் வேலை கொடுப்பதற்குத் தான் முதலில் நடவடிக்கை எடுப்பதாகவும், 600 நாளுக்குக் குறைய வேலை செய்தவர்கள் பற்றிப் பின்னர் நடவடிக்கை எடுப்பதாகவும் தனைச் சந்தித்த விவசாயப்படைத் தூதுக்குழுவுக்கு நீர்ப்பாசன மந்திரி உறுதியளித்திருக்கின்ருர். இவ்விரு பிரிவினரினதும் பெயர்ப்பட்டியலைத் தனக்குச் சமர்ப்பிக்குமாறு அவர் விவசாயப் படைத்தலைமைக் காரியாலயத்தைக் கேட்டிருக்கின்ருர்.

### மார்கழியில் ஓய்வு பெறவேண்டும்

சென்ற மாசிமாதம் 12ஆம் திகதிக்கும் வருகிற மார்கழி மாதம் 31ஆம் திகதிக்குமிடையிலே 55வயது பூர்த்தியடையும் அரசாங்க ஊழியர்கள் வருகிற மார்கழி மாதம் 31ஆம் திகதியுடன் கட்டாய ஓய்வு பெற வேண்டுமென்று பொது நிர்வாக அமைச்சு புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது. சென்ற மாசி 12ஆம் திகதிக்கும், வருகிற மார்கழி 31ஆம் திகதிக்குமிடையிலே 55வயது பூர்த்தியடையும் அரசாங்க ஊழியர்களுக்கு மேலும் ஒரு வருடகால அவகாசம் கொடுபடுமென்பது எதிர்பாராத ஒரு தவருகும்.

### 200 ஆசிரிய தம்பதிகள்

பல்வேறு மாவட்டங்களிலும் தூரத்தூரம் பிரிந்து போய்க் கடமையாற்றிவந்த திருமணமான 200 ஆசிரிய தம்பதிகளைக் கல்வி அமைச்சு இப்பொழுது ஓரிடத்திலே கடமைபார்க்க ஒழுங்குபடுத்தியிருக்கிறது. இன்னுமே வெவ்வேறு மாவட்டங்களில் பிரிந்திருந்து கடமையாற்றும் தம்பதிகளின் மாற்றம் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை முடிகிறவரையிலே பின்போடப்பட்டிருக்கிறது.

### பிரயாணிகளுக்கு வேண்டுகோள்

பங்குனி 1ஆம் திகதியிலிருந்து பஸ்களிலே மிதிபலகைப் பிரயாணம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. அதனல் சனநெருக்கடி நிறைந்த பஸ்களில் ஏறவேண்டாமென்றும், நோகாலத்துடன் பஸ் நிலையங்களுக்குச் சென்று பஸ்களில் இலகுவாக ஏறவேண்டுமென்றும், அவ்வாறு செய்து மிதிபலகையையும், பஸ்களையும் சேதமுருது காப்பாற்றவேண்டுமென்றும் போக்குவரத்துச் சபை பிரயாணிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வசிக்கும் திரு. நிக்கலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு பங்குனி மாதம் 6-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்," யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.